**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.32/2015**

Deposition of **<u>D.W.1</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. Menaka, Gr. III Bench Clerk of this court, on 06.11.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : கந்தசாமி Father's Name : மாரப்ப கவுண்டர்

துவக்க நேரம் :04.49 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சொல்ல சொல்லத்தான் இந்த நிரூபண வாக்குமூலம் எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். வாதி இந்த வழக்கை என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார் என்றால் தடத்திற்காக போட்டுள்ளார்.

2. நான் சொல்வது போல் தடத்திற்காக இந்த வழக்கு போடப்படவில்லை என்றாலும், நான், தாவா சொத்தில் வாயின் அனுபவத்தை தொந்தரவு செய்யக்கூடாது என்றும் தாவா சொத்தை விளம்புகை செய்யக்கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்

Typed by Tmt.L.Kalaiselvi O.S. No.32/2015, Dt.06.11.2024.

என்றால் எனக்கு எதிராக வழக்கு தடத்திற்காக போட்டுள்ளார்.

3. எனக்கு வழக்கு விவரமே தெரியவில்லை என்றாலும் தவறான தகவல்களை சொல்லி இந்த நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண். 177 அதன் உட்பிரிவு எனக்கு தெரியாது.

4. என்னிடம் காட்டப்படும் எனது நிரூபண வாக்குமூலத்தில், சர்வே எண் 177/2-ல் ஏக்.3.89 நிலம் உள்ளதாகவும் 03.09.1971 அன்று ஏக்.3.89 செண்டில் 0.93 ஏக் நிலத்தை முத்துசாமி கவுண்டருக்கு விற்றுவிட்டதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதே தேதியில் கருப்பண்ண கவுண்டர் என்பவர் சின்னா கவுண்டர் என்பவருக்கு இதே சர்வே எண்ணிலும் விஸ்தீரணத்திலும் ஏக்.0.08 நிலம் விற்றுவிட்டதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மொத்தம் ஏக்.1.01 செண்ட் நிலம் விற்றுள்ளார் என்றால் சரிதான்.

5. ராமசாமி கவுண்டர் கிரயம் மூலம் எவ்வளவு நிலம் பெற்றுள்ளார் என்றால் ஏக் 2.81 கிரயம் பெற்றுள்ளார். மேற்படி ஏக்.3.89 -ல் மீதம் எவ்வளவு உள்ளது என்றால் மீதி ஏக்.0.07 நிலம் உள்ளது. வாதியின் நிலம் கூடல்மலை கிராம சர்வே எண்.177-ல் 2 ஏ தான் வாதிக்கு பாத்தியப்பட்ட நிலம் என்றால் சரிதான்.

6. மேற்படி வாதியின் நிலம் தென்வடலாக 78 மீ என்று புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த 7 செண்ட் என்பது 3052 சதுர அடிகள் என்றால் சதுர அடி தெரியாது ஆனால் 7 செண்ட் நிலம் உள்ளது. 78 மீ என்பது 255 அடி என்றால் சரிதான். ஆகையால் 3052 சதுர அடியை 255 நீளத்தால் வகுத்தால் 12 அடி தடம் மட்டுமே அங்கு உள்ளது என்றால் சரியல்ல அங்கு 24 அடி தடம் உள்ளது.

Typed by Tmt.L.Kalaiselvi O.S. No.32/2015, Dt.06.11.2024.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 05.02 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Additional District Munsif(F.A.C), Attur

Typed by Tmt.L.Kalaiselvi O.S. No.32/2015, Dt.06.11.2024.